செய்தி வெளியீடு எண்: 89 நாள்: 06.02.2013

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் மொழியியல் சிறப்பு பயிலரங்கு பள்ளிக்கல்வியல் தமிழ்மொழிக் கற்பித்தல் அணுகுமுறைகள்

---

தமிழ் மொழி வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 2013 பிப்ரவரி திங்கள் முழுவதும் பல்வேறு ஆய்வரங்கங்கள், தேசிய/ பன்னாட்டுக் கருத்தரங்கங்கள், பயிலரங்கங்கள், கலை நிகழ்ச்சிகள், அறக்கட்டளைச் சொற்பொழிவுகள், சிறப்பு சொற்பொழிவுகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டு 01.02.2013 முதல் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகின்றன.

அந்த வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழ் மொழி (ம) மொழியியல் புலத்தால் "பள்ளிக் கல்வியில் தமிழ்மொழிக் கற்பித்தல் அணுகுமுறைகள்" எனும் தலைப்பில் மூன்று நாள் பயிலரங்கின் (06.02.2013 – 08.02.2013) தொடக்கவிழா இன்று (06.02.2013) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தொடங்கப்பட்டது. இப்பயிலரங்கில் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 70 பள்ளிக் கல்வித்துறை ஆசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழார்வலர்கள் என ஏறத்தாழ 150 பேர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன தமிழ் மொழி (ம) மொழியியல் புல இணைப்பேராசிரியர் முனைவர் பெ. செல்வக்குமார் அவர்கள் வரவேற்புரை நல்கினார். இதனைத் தொடர்ந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் முனைவர் ந. அருள் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சென்னை காயிதே மில்லத் கல்லூரியின் ஒய்வுப்பெற்ற தமிழ்த்துறை பேராசிரியர் முனைவர் சேமுமு. முகமதலி அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தினார். தொடக்கவிழாவின் நிறைவாக இந்நிறுவன ஆய்வியல் நிறைஞர் மாணவர் பொ. மாதேசு நன்றியுரை கூறினார்.

இதனைத் தொடர்ந்து இப்பயிலரங்கின் முதல் அமர்வு முற்பகல் 11.30 மணியளவில் தொடங்கப்பட்டது. இவ் அமர்வில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனப் பேராசிரியர் முனைவர் இரா. கோதண்டராமன் அவர்கள் "என்று, என, இடைச்சொற்கள்" எனும் தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

இரண்டாம் அமர்வில் கோவை, பாரதியார் பல்கலைக்கழக மொழியியல் துறை பேராசிரியர் முனைவர் சி. சிவசண்முகம் அர்வர்கள் "தமிழ்மொழிக் கற்பித்தல் நெறி" எனும் தலைப்பிலும், புதுவை மொழியியல் மற்றும் பண்பாட்டு நிறுவனப் பேராசிரியர் முனைவர் கோ. இரவிசங்கர் அவர்கள் "ஒலியனியல்புகள் புரிதல் நெறி" எனும் தலைப்பிலும் உரை நிகழ்த்தினார்கள். தொடர்ந்து 07.02.2013 மற்றும் 08.02.2013 ஆகிய நாட்களில் பயிலரங்க அமர்வுகள் நடைபெறவுள்ளன.

---

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9